21.2.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்ப பயிற்சிவிவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்ப பயிற்சி

வத்தலகுண்டு வட்டார விவசாயிகளை ஒருங்கிணைத்து காந்திகிராம வேளாண்மை அறிவியல் மையத்தில், வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் வியாழக்கிழமை பயிற்சியளிக்கப் பட்டது. வேளாண்மை அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் உதயகுமார் விவசாயிகளுக்கு நவீன வேளாண் தொழில் நுட்பங்களையும், விளைபொருள்களை மதிப்புக் கூட்டி அதை லாபகரமாக சந்தைப்படுத்தும் பயிற்சிகளை வழங்கினார். தோட்டக் கலைப் பயிர்களில் நிழல்வலைக் குடிலுக்குள் நாற்றுவிட்டு நடும் தொழில்நுட்பம், துல்லியப்பண்ணை, பசுமைக்குடில் சாகுபடியில் மகசூலை அதிகரித்தல் மற்றும் சிப்பிக் காளான் வளர்ப்பு முதலிய பயிற்சிகள் வழங்கப்பட்டன. மேலும் நன்கு வெடித்த பருத்தி காய்களை செடியிலிருந்து அறுவடை செய்யும் கருவி செயல்விளக்கம் காண்பிக்கப்பட்டது. இதுபோல பல நவீன தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. வத்தலகுண்டு வேளாண் ஒருங்கிணைப்பாளர்கள் ற்றும் திட்ட அலுவலர்கள் பயிற்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

### கொய்மலர் சாகுபடி தொழில் நுட்ப பயிற்சி

கொடைக்கானல் கீழ்மலைப் பகுதியான தடியன் குடிசையில் கொய்மலர் சாகுபடி குறித்த தொழில் நுட்ப பயிற்சி முகாம் நடைபெற்றது. தோட்டக் கலை ஆராய்ச்சி நிலையம் சார்பில் தோட்டக்கலை மாணவர்களுக்கு கொய்மலர் சாகுபடி குறித்த தொழில் நுட்ப பயிற்சி முகாம் கொடைக் கானல் கீழ்மலைப் பகுதியான தடியன் குடிசையில் நடைபெற்றது.

முகாமுக்கு தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத் தலைவர் ப்ரணிதா தலைமை வகித்து பேசினார். தோட்டக்கலை உதவி பேராசிரியர்கள் சதீஸ், முத்துசாமி ஆகியோர் கொய்மலர்களான காரனேசன், ஜெர்பரா, கிளாடியோஸ், பேர்ட் ஆப் பாரடைஸ் மற்றும் இணைப் பயிர்கள் குறித்து பேசினர். முகாமில் உதவிப் பேராசிரியர்கள் முத்துராமலிங்கம், முத்துராஜ், குமார், அசோக்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## <u>அன்னமங்கலம் கிராமத்தில் வயல் விழா</u>

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை அருகேயுள்ள அன்னமங்கலம் கிராமத்தில், வாலிகண்டபுரம் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் சார்பில் மஞ்சள் பயிருக்கான வயல் விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு தலைமை வகித்து, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் ஜெ. கதிரவன் பேசியது: பெரம்பலூர் மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர்களை பொருத்தவரையில் மஞ்சள் சாகுபடி குறிப்பிடத்தகுந்த இடத்தைப் பெற்றுள்ளது. இங்கு ஈரோடு உள்ளூர் ரகம் மற்றும் சேலம் உள்ளூர் ரகங்கள் தொன்றுதொட்டு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்த ரகங்களில் முறையான பூச்சி நோய் பராமரிப்பு இல்லாத காரணத்தாலும், தொடர்ந்து ஒரே ரகத்தை பயிர் செய்வதனாலும், எளிதில் பூச்சி நோய் தாக்குதலுக்கு உள்ளாகி மகசூல் இழப்பு ஏற்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையமானது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அண்மையில் வெளியிட்ட கோ- 2 என்ற மஞ்சள் ரகத்தை, கடந்த ஆடிப் பட்டத்தில் அன்னமங்கலம் கிராமத்தில் 5 விவசாயிகளுக்கு வழங்கி பயிரிடச் செய்தது. இந்த ரகம், இலைக் கருகல், இலைப்புள்ளி, கிழங்கு அழுகல் உள்ளிட்ட நோய்களுக்கு எதிர்ப்புத் திறன் வாய்ந்த ரகமாகும். விவசாயிகள் வழக்கமாகப் பயிரிட்டு வந்த ரகங்கள் நோய் பாதிப்புக்குள்ளான போதிலும், கோ- 2 ரகமானது நோயைத் தாங்கி வளர்ந்தது. மேலும், இந்த ரகத்தின் தூர் பிடிப்புத்

திறனும் அதிகமாக உள்ளது. ஒரு கொத்துக்கு 2.5 முதல் 3 கிலோ வரை மஞ்சள் விளைந்திருந்தது. இந்த சிறப்பு அம்சங்களை மற்ற விவசாயி களும் தெரிந்துகொள்ளவே, இதுபோன்ற மஞ்சள் பயிருக்கான வயல் விழா நடத்தப்படுகிறது என்றார். விழாவில் தொழில்நுட்ப வல்லுநர்கள் இரா. வசந்தகுமார், சு. திவ்யா, கிரிப்கோ நிறுவன திருச்சி மண்டல உதவி மேலாளர் ஜெகந்நாதன் உள்பட விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

**நெல்லை மாவட்ட விவசாயிகளுக்காக கூடுதலாக 6 நெல் கொள்முதல் நிலையங்கள்**

திருநெல்வேலி மாவட்ட விவசாயிகளுக்காக கூடுதலாக 6 நெல் கொள்முதல் நிலையங்கள் சனிக்கிழமை முதல் திறக்கப்படும் என ஆட்சியர் மு.கருணாகரன் தெரிவித்தார். திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. ஆட்சியர் மு.கருணாகரன் தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் எம்.ஜி. குழந்தைவேல், வேளாண்மைத் துறை துணை இயக்குநர் பெருமாள், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ராஜன் ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக் கூட்டத்தில், விவசாயிகள் பேசியது: மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் நெல் அறுவடை தொடங்கியுள்ள நிலையில், அறுவடைக்கான இயந்திரங்கள் தட்டுப்பாடு இருப்பதால் தனியாரிடம் இயந்திரங்களை கூடுதல் வாடகைக்கு வாங்க வேண்டியுள்ளது. இது விவசாயிகளுக்கு கட்டுப்படியாகவில்லை. எனவே, அரசே தனியாரிடம் இருந்து அறுவடை இயந்திரங்களை பெற்று நியாயமான வாடகைக்கு வழங்க வேண்டும். மேலும், கூடுதலாக நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும். இந்த நிலையங்களில் குறிப்பிட்ட அளவுதான் கொள்முதல் செய்யப்படும் என நிர்பந்தம் செய்யக் கூடாது என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதற்கு பதில் அளித்து ஆட்சியர் கூறியது: நெல் கொள்முதலுக்காக ஏற்கெனவே மாவட்டம் முழுவதும் 23

இடங்களில் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. அத்துடன் சீதபற்பநல்லூர், அரியகுளம், ஆழ்வார்குறிச்சி, கீழப்பாட்டம், தென்கலம் உள்ளிட்ட 6 இடங்களிலும் சனிக்கிழமை முதல் கொள்முதல் நிலையங் கள் திறக்கப்படும். அறுவடை இயந்திரங்கள் பற்றாக்குறையைப் போக்க பிற மாநிலங்களில் உள்ள அரசு துறைகளிடம் இருந்து இயந்திரங்களை கொண்டுவந்து விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்றார். இக் கூட்டத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வட்டார துணைச் செயலர் சேக் மைதீன் அளித்த மனு: செங்கோட்டை வட்டம், வடகரை கீழ்பிடாகை கிராமம் மேடக்கால் பாசனம் முழுவதும் அடவிநயினார் கோயில் அணையின் தண்ணீரை நம்பியே உள்ளது. இதன் மூலம் 600 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன. இந்தப் பாசனக் காலின் மடைக் கதவு சேதமடைந்துள்ளதால் கார் சாகுபடியும், பிசான சாகுபடியும் பாதிக்கப்பட்டுள்ளது. உடனடியாக மடை கதவை சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் ஆர். கசமுத்து அளித்த மனு: திருநெல்வேலி மாவட்டத்தில் அதிகப்படியான மழை பெய்தும் நீர்நிலைகளையும், கால்வாய்களையும் பராமரிக்காத காரணத்தால் ஓடை, குளங்கள், ஏரிகளில் தண்ணீரை தேக்க முடியாமல் பெரும்பகுதி நீர் வீணாக கடலில் கலந்துள்ளது. நிகழாண்டு மட்டும் 15 டிஎம்சி தண்ணீர் வீணடிக்கப்பட்டுவிட்டது. எனவே, நீராதாரங்களை பாதுகாக்க ஆண்டுக்கு ரூ.100 கோடி என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்து மழை தண்ணீரை பாசனத்துக்கு பயன்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் கூட்டத்தில், விவசாயிகள் சங்க பிரதிநிதி குறிச்சியைச் சேர்ந்த கணேசன் மறைவுக்கு, அரசு அலுவலர்களும், விவசாயிகளும் மௌன அஞ்சலி செலுத்தினர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கோமாரி நோய் தடுப்பூசி பணிக்கு...ஒத்துழைப்பு! கால்நடை வளர்ப்போருக்கு அழைப்பு

ஈரோடு:ஈரோடு மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், தேசிய கோமாரி நோய் தடுப்பு திட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடந்தது. கலெக்டர் பிரபாகர் பேசியதாவது:ஈரோடு மாவட்டத்தில், தேசிய கோமாரி நோய் தடுக்கும் வகையில், மார்ச், 1 முதல், 21ம் தேதி வரை, தொடர்ச்சியாக, 21 நாட்களுக்கு, அனைத்து கால்நடைகளுக்கும் (பசு, எருமை இனங்களுக்கு), கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி நடக்கிறது. ஈரோடு மாவட்டத்தில் மொத்தமுள்ள, 3.69 லட்சம் கால்நடைகளுக்கும், 100 சதவீதம் தடுப்பூசி பணி மேற்கொள்ள வேண்டும். கோமாரி நோய் தடுப்பூசி போட, கால்நடை உதவி மருத்துவர்கள் தலைமையில், 117 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணி, காலை, 6 முதல், 9 மணி வரையும், மாலை, 3 முதல், 5 மணி வரையும் நடக்கும்.நான்கு மாதங்களுக்கு மேல் உள்ள கன்றுகளுக்கும், சினை மாடுகளுக்கும் (நிறைமாத சினை மாடுகள் தவிர) தடுப்பூசி போடப்படுகிறது. தடுப்பூசி போடப்பட்ட கால்நடைகளுக்கு, தனியாக அடையாள அட்டை வழங்கப்படும். கடம்பூர், தாளவாடி, பர்கூர் ஆகிய மலைப்பகுதியில் உள்ள, 42,252 கால்நடைகளுக்கு, கடந்த, 14ம் தேதி முதல், தடுப்பூசி போடும் பணி நடந்து வருகிறது. கால்நடை வளர்ப்பவர் கள், மறுப்பு தெரிவிக்காமல், ஒத்துழைப்பு தர வேண்டும்.இதற்காக, அனைத்து பஞ்சாயத்துக்களிலும், இன்று (21ம் தேதி) சிறப்பு கிராமசபா கூட்டம் நடத்தப்படும். அதில், கால்நடை பராமரிப்புத்துறையினர் பங்கேற்று, விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். 24ம் தேதி பஞ்.,

தலைவர்கள், செயலாளர்கள், வி.ஏ.ஓ.,க்களுக்கு கோமாரி நோய் விழிப்புணர்வு பயிற்சி வழங்கப்படும், என்றார்.கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் ஜெயராமன், உதவி இயக்குனர்கள் மணிசேகர், தங்கவேல், முருகன், கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பேராசிரியை யசோதா உட்பட பலர் பங்கேற்றனர்.

**<u>நடப்பாண்டு 1.52 லட்சம் மெ.டன் உணவுதானியங்கள் உற்பத்தி செய்யப்படும்: கலெக்டர்</u>**

ரூர்:கரூர் மாவட்டத்தில், நடப்பாண்டு உணவு தானிய உற்பத்தி, 1.52 லட்சம் மெட்ரிக் டன் கிடைக்க இலக்கு நிர்ணயித்து எதிர்பார்க்கப் படுகிறது என, வேளாண் குறைதீர் கூட்டத்தில் கலெக்டர் ஜெயந்தி, தெரிவித்தார்.கலெக்டர் ஜெயந்தி கூறியதாவது;கரூர் மாவட்டத்தில் குளிர்கால பருவ சராசரி மழையான, 16.80 மி.மீ., இதுவரை, 26.29 மி.மீ., மழை கிடைக்கப்பெற்றுள்ளது. சராசரி மழையளவை காட்டிலும், 56 சதவீதம் கூடுதலாக பெறப்பட்டுள்ளது. சம்ப பருவத்தில், 13 ஆயிரத்து, 172 ஹெக்டர் நெல், 26 ஆயிரத்து, 797 ஹெக்டர் சிறுதானியப் பயர்கள், 13 ஆயிரத்து, 338 ஹெக்டர் பயிறு வகைகள் சாகுபடி செய்யப்பட்டு, அறுவடை பணி நடக்கிறது. கரூர் மாவட்டத்தில் உணவு தானிய உற்பத்தி இயக்கு, 1.06 லட்சம் மெட்ரிக் டன்னாகும். நெல், சிறுதானியப் பயிர்கள், பயிறு வகைகள் ஆகியவைகளில் மேற்கொள்ளப் பட்டுள்ள பயிர் அறுவடை பரிசோதனை முடிவுகள் படியும், மற்ற பயிர்களில் மேற்கொள்ளப் பட்டுள்ள மகசூல் காரணிகள் கணக்கீடு முறையில், அனைத்து உணவு தானிய பயிர்களில் மொத்தம், 1.52 லட்சம் மெட்ரிக் டன் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.கோடை பருவத்தில், இதுவரை, 1,641 ஹெக்டரில் சிறுதானிய பயிர்களும், 1,320 ஹெக்டரில் பயிறுவகைகள், 2,042 ஹெக்டரில் எண்ணைய் வித்து பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பயிர்கள் அனைத்தும் வளர்ச்சி நிலையில் உள்ளன.மாவட்டத்தில் உள்ள, அனைத்து தனியார் உரக்கடைகள்

மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில், 991 மெட்ரிக் டன் யூரியா, 319 மெட்ரிக் டன் டி.ஏ.பி., 658 மெட்ரிக் டன் பொட்டாஷ், 796 மெட்ரிக் டன் கலப்பு உரங்கள் என மொத்தம், 2,764 மெட்ரிக் டன் உரங்கள் இருப்பில் உள்ளது. ஒருங்கிணைந்த தோட்டக் கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 50 சதவீத மானியத்தில் பழச்செடிகள், வீரிய ஒட்டு காய்கறி விதைகள் மற்றும் பூச்செடிகள், ஒரு நபருக்கு, ஒரு ஹெக்டேருக்கு மிகாமலும், காய்கறி விதையில், 50 சதவீதம் மானியத்தில் ஒரு நபருக்கு, அரை ஹெக்டேருக்கு மிகாமல் வழங்கப் படுகிறது. பழச்செடிகள், காய்கறி விதைகள் தேவையான விசாயிகள், அருகில் உள்ள வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர்கள் அலுவலகத்தில் பெற்று பயனடையலாம்.இவ்வாறு அவர் கூறினார்.

**<u>ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நாளை இந்திய பருத்தி கழகம் நேரடி கொள்முதல்</u>**

பெரம்பலூர்:தமிழகத்தில் முதன் முறையாக, இந்திய பருத்தி கழகம், எளம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூட ஏலத்தில் நாளை கலந்துகொண்டு, விவசாயிகள் விற்பனைக்கு கொண்டுவரும் பருத்தியை கொள்முதல் செய்கிறது என கலெக்டர் அறிவித்துள்ளார். பெரம்பலூர் மாவட்ட பருத்தி விவசாயிகளுக்கும், இந்திய பருத்தி கழக அலுவலர் களுக்கும் இடையே ஆலோசனை கூட்டம், கலெக்டர் தரேஷ் அஹமது தலைமையில் நடந்தது. கூட்டத்தில், விவசாயிகள் பருத்தியை நேரடி கொள்முதல் செய்வது குறித்தும், பருத்திக்கு விலை நிர்ணயம் செய்வது குறித்தும், தங்களது கருத்துக்களை, இந்திய பருத்தி கழக அலுவலர் களிடம் தெரிவித்தனர். கூட்டத்தில் கலெக்டர் தரேஷ் அஹமது கூறியதாவது, பெரம்பலூர் மாவட்டம் பருத்தி சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியில், தமிழ்நாட்டில் முதலிடம் வகிக்கிறது. நமது மாவட்டத்தில், கடந்த மூன்று ஆண்டுகளாக சராசரியாக, 27,230 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, 28,918 மெ.டன் பருத்தி உற்பத்தி செய்யப்

பட்டது. பருத்திக்கு சராசரியாக ஒரு குவிண்டாலுக்கு, 3,800 முதல், 4,000 ரூபாய் வரை கிடைத்தது. இதுவரைக்கும் குறைந்தபட்ச ஆதார விலைக்கு குறையாமல் கிடைக்கப் பெற்றது. கடந்த, 25 ஆண்டுகளாக, இந்திய பருத்தி கழகம், தமிழ்நாட்டில் பருத்தி கொள்முதல் செய்யவில்லை. மாவட்ட நிர்வாகத்தின் முயற்சியால், நாளை, எளம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், இந்திய பருத்திக் கழகம் மூலம் பருத்தியை கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்திய பருத்தி கழகம் கொள்முதல் செய்யப்பட்ட தினத்திலிருந்து, எட்டு நாளில் பருத்தி விவசாயிகளுக்கு, காசோலை மூலம் பணம் பட்டுவாடா செய்யப்படும். இந்த வாய்ப்பினை பயன்படுத்தி, பருத்தி விவசாயிகள், தாங்கள் சாகுபடி செய்த பருத்தியை, பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு கொண்டுவந்து, சரியான விலைக்கு விற்பனை செய்து பயன்பெற வேண்டும்.என்று அவர் தெரிவித்தார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>தோட்டக்கலை பயிர்களை கலெக்டர் ஆய்வு</u>**

தண்டராம்பட்டு, : தண்டராம்பட்டு அருகே தோட்டக்கலை பயிர்களை கலெக்டர் ஞானசேகரன் நேற்று முன்தினம் ஆய்வு செய்தார். தண்டராம்பட்டு அடுத்த ராவந்தவாடி, டி.வேலூர், வேப்பூர் செக்கடி, மோத்தக்கல், ரெட்டியார் பாளையம் ஆகிய கிராமங்களில் தோட்டக்கலை சார்பில் நிழல் வலை மூலமாக வளர்க்கப்படும் தக்காளி, கத்திரிக்காய், மிளகாய் நாற்றுகள், சாமந்தி, சம்பங்கி, சூரியகாந்தி வளர்க்கும் பணியை கலெக்டர் ஞானசேகரன் பார்வையிட்டார். கல்பந்தல் திட்டத்தின் கீழ் ரூ.4 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பந்தல் காய்கறி

சாகுபடிகளையும் ஆய்வு செய்தார். ஆர்ஏடிபி திட்டத்தின் மூலம் பண்ணைக்குட்டை அமைக்கும் பணி, மண்புழு உரம் தயாரித்தல், சொட்டுநீர் பாசனம் மூலம் பயிரிடப்பட்டுள்ள முலாம்பழம், தர்பூசணி, மிளகாய், துவரை, திருந்திய நெல்சாகுபடி பயிர்களை பார்வையிட்டார். அப்போது இணை வேளாண் இயக்குனர் ஜெயசந்திரன், தோட்டக்கலை துணை இயக்குநர் ஜெயகாந்தன், நீர்வடிவ பகுதி வேளாண் உதவி இயக்குநர் அரக்குமார், தாசில்தார் தனஞ்செயன், உதவி வேளாண் இயக்குநர் பாலா, வேளாண்மை அலுவலர் நடராஜன் உட்பட பலர் உடன் இருந்தனர்.

## <u>ஆந்திர ஜண்டா வெங்காயம் ஒன்றரை டன் விதைக்கு 15 டன் மகசூல் தரும்</u>

பெரம்பலூர், : கர்நாடகாவின் பொன்னி அரிசியைப்போல், ஆந்திராவின் ஜண்டா வெங்காயம் பெரம்பலூர் மாவட்டம் எசனை யில் சாகுபடி செய்ய அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதில் ஒன்றரை டன்னுக்கு 15 டன் மகசூல் பெற முடியும். தமிழகத்திலேயே அதிகப்படியான சின்ன வெங்காயம் பெரம்பலூர் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படுவதால், கடந்த 10 ஆண்டுகளாக பெரம்பலூர் மாவட்டம் முதலிடம் வகித்து வருகிறது. பெரம்பலூர் மாவட்டத்தில் மட்டும் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிணற்றுப்பாசன விவசாயிகள் உள்ளனர். இங்கு நடப்பாண்டு 5,521 ஹெக்டேரில் அதாவது 13,636 ஏக்கரில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பருவமழை பொய்த்துப்போனதாலும், பருவம் தப்பி பெய்வதாலும் ஆண்டுக்கு ஆண்டு சின்ன வெங்காய சாகுபடிக்கான பரப்பளவு குறைந்துவந்தபோதும் கடந்த 10 ஆண்டுகளாக தமிழக அளவில் பெரம்பலூர் மாவட்டத்தை மிஞ்ச வேறெந்த மாவட்டத்தாலும் முடியவில்லை. இப்பகுதியில் அறுவடைசெய்த வெங்காயத்தை வயல்களிலேயே பட்டறை அமைத்துப் பாதுகாத்து வந்த விவசாயிகள், வியாபாரிகளை வயல்களுக்கே அழைத்து வந்து பேரம்பேசி

விற்பதற்கு மாற்றாக மாவட்ட கலெக்டர் தரேஸ்அகமது செட்டிக்கு ளத்தில் வெங்காயத்தை ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்தார். பிறகுதான் இங்குள்ள சின்ன வெங்காயத்தின் பெருமை தமிழகத்திற்கே தெரியவந்தது. இந்நிலையில், சின்ன வெங்காய உற்பத்தியில் ஆண்டுக்கு ஆண்டு சாதனை படைத் துவரும் எசனை விவசாயி ஒருவர் தற்போது ஆந்திராவின் புகழ்பெற்ற ஜண்டா வெங் காயத்தைப் பயிரிட தயாராகியிருப்பது ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது. எசனை கிராமத்தைச் சேர்ந்தவர் லோகு என்கிற நல்லு சாமி(50). இவர் தனது வயலில் ஆந்திராவில் பிரபலமான சின்ன வெங்காய ரகமான ஜண்டா வெங்காய விதைகளை ஒன்றரை டன் வாங்கி வந்துள்ளார். இவற்றை தனது வயலில் நடவுள்ளார். 3 மாதங்கள் சாகுபடி கால முள்ள இந்த வெங்காயம், சின்னவெங்காயம் மற்றும் பெல்லாரி ஆகியவற்றிற்கு இடைப்பட்ட சைசில் உள்ளது. குறிப்பாக சின்ன வெங்காயத்தை காட்டிலும் 2 மடங்கு பெரிதாய் இருப்பதால் அதிக மகசூல் பெற முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஒன்றரை டன் ஜண்டா வெங்காயத்தால் 3 மாதத்தில் 15 டன் மகசூலைப் பெறமுடியும் என்பது ஆச்சர்யமூட்டும் தகவலாகும். இவரது முயற்சி வெற்றிபெற்றால், பெரம்பலூர் மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான விவசாயிகள் ஜண்டா வெங்காய சாகுபடியில் ஈடுபடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகி றது. அரிசியென்றால் கர்நா டகா பொன்னிக்கு ஆசைப் படும் பலரும் இனி சின்ன வெங்காயமென்றால் ஆந்திராவின் ஜண்டா வெங்காயத்திற்கு ஆசைப்படும் நிலை உருவாகக்கூடும்.

## <u>சோழமாதேவியில் விவசாயிகளுக்கு எலி ஒழிப்பு பயிற்சி</u>

அரியலூர், : எலிகளை ஒழிப்பதற்கான பயிற்சி முகாம் சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையத்தில் நடைபெற்றது. அட்மா திட்டத்தின் கீழ் மாவட்ட அளவில் விவசாயிகளுக்கு எலி ஒழிப்பது குறித்த பயிற்சி முகாம் சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையத்தில் நேற்று நடைபெற்றது. அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சகாதேவன் வரவேற்றார். ஒன்றிய கவுன்சிலர்கள் கண்ணன், பஞ்சநாதன்

முன்னிலை வகித்தனர். வேளாண்மை உதவி இயக்குனர் பழனிசாமி சிறப்புரையாற்றினார். அவர் பேசுகையில், எலிகளை கட்டுப்படுத்த வயல் வரப்புகளின் உயரத்தையும் குறைக்க வேண்டும். வயல்களில் பயிர் பருவத்தில் ‘ஏ‘ வடிவ குச்சிகளை அமைப்பதன் மூலம் எலிகளின் இயற்கை எதிரிகளான ஆந்தை, கோட்டான் ஆகியவை எலிகளை பிடிக்க ஏதுவாக இருக்கும். மேலும் திருந்திய நெல் நடவு செய்ய வேண்டும். எலிகளினால் சேதம் அதிகமாகும்போது எலிக்கொல்லிகளான செல்பாஸ் மாத்திரைகள், புரோமோடைலான் கேக் போன்றவற்றைக்கொண்டு உயிரோட்டம் உள்ள எலி வலைகளில் இட்டு அழிக்கலாம் என்றார். கிரீடு வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜாஜோஸ்லின் பேசுகையில், கதிர் உருவாகும் தருணத்தில் அதிக அளவில் தஞ்சாவூர் எலிக்கிட்டிகளை பெருமளவில் வைத்து எலிகளை கட்டுப்படுத்தலாம். மேலும் விந்தைப் பொறி எனும் எலிப்பொறி சாதாரண எலிப்பொறியைவிட ஒரே நாளில் 20 முதல் 22 எலிகளை பிடித்து அழிக்கலாம். இந்த விந்தைப்பொறியானது வேளாண் அறிவியல் மையம் காட்டுப்பாக்கத்தில் கிடைக்கும் என்று கூறினார். பயிற்சியில் வேளாண்மை அதிகாரி சுகந்தி, தொழில்நுட்ப வல்லுனர் ராஜ்கலா, உமாசந்திரா ஆகியோர் எலிகளை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விரிவாக எடுத்துக் கூறினர். ஏற்பாடுகளை, உதவி தொழில்நுட்ப வல்லுனர் குமணன் மற்றும் உதவி வேளாண்மை அதிகாரி சிவக்குமார் ஆகியோர் செய்து இருந்தனர். அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த 80 விவசாயிகள் பயிற்சியில் கலந்துகொண்டனர்.

## <u>விவசாயிகளுக்கு பட்டு புழு வளர்ப்பு பயிற்சி</u>

ஜெயங்கொண்டம், : ஜெயங்கொண்டம் வட்டார வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் அட்மா திட்டத்தின் கீழ், மல்பெரி சாகுபடி மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு முறைகள் பற்றிய பண்ணைப் பள்ளி துவக்க விழா உடையார்பாளையம் தாலுகா குண்டவெளி கிராமத்தில் நடைபெற்றது. வட்டார வேளாண்மை உதவி

இயக்குனர் இளங்கோவன் தலைமை வகித்தார். வேளாண் அதிகாரி அமுதன் துவக்கஉரையாற்றினார். பட்டு வளர்ச்சித் துறை அதிகாரிகள் உலகநாதன், ஜோதி ஆகியோர் மல்பெரி சாகுபடியில் கடைபிடிக்க வேண்டிய நவீன தொழில் நுட்பங்கள் குறித்தும், பட்டுப்புழு வளர்ப்பு முறைகள் குறித்தும் விளக்கமளித்தனர். வேளாண்மை உதவி அதிகாரி மணிகண்டன், அட்மா திட்ட அதிகாரிகள் மீனாட்சி, முருகன், சவுந்திரராஜன் ஆகியோர் நவீன தொழில் நுட்பங்களை விளக்கினர். குண்டவெளி கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

## <u>விலையில்லா வெள்ளாடு வழங்க பயனாளிகள் தேர்வு கிராமசபை கூட்டம்</u>

திருமானூர், : திருமானூர் அடுத்த வடுகபாளையம் ஊராட்சியில் விலையில்லா வெள்ளாடு வழங்க பயனாளிகள் தேர்னவுக்கான விண்ணப்பங்கள் பெற சிறப்பு கிராமசபை கூட்டம் நடைபெற்றது. ஊராட்சி தலைவர் கரும்பாயிரம் தலைமை வகித்து பயனாளி களிடமிருந்து மனுக்களை பெற்றுக்கொண்டார். ஊராட்சி துணைத்தலைவர் தனபால் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் கால்நடை மருத்துவர் ரமேஷ் பேசுகையில், ஏழை, விதவை, கணவனால் கைவிடப்பட்டோர், மாற்று திறனாளி பெண்கள் இத்திட்டத்தில் பயன் பெற மனுக்களை கொடுக்கலாம். இங்கு மனு கொடுத்த 55 பயனாளிகளுக்கு ஒரு ஆண் 3 பெண் ஆடுகள் வீதம் 4 ஆடுகள் வழங்கப்படும். தொடர்ந்து கால்நடை மருத்துவர்கள் இந்த ஆடுகளை கண்காணித்து வருவார்கள். அரசின் முலம் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு சிறப்பு சிகிச்சைகளும் வழங்கப்படும். பயனாளிகள் எக்காரணம் கொண்டு ஆடுகளை விற்கவோ, மற்றவர்களிடம் மேய்ப்பதற்கோ விடக்கூடாது என்றார். நிகழ்ச்சியில் துணை வட்டார

வளர்ச்சி அலுவலர் சிவாஜி, ஊராட்சி செயலாளர் சந்திர மோகன் மற்றும் ஊராட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## எண்ணெய்வித்துப் பயிர்களில் உற்பத்தியை பெருக்குவது எப்படி? விவசாயிகளுக்கு பயிற்சி

அன்னவாசல், : எண்ணெய்வித்துப் பயிர்களில் உற்பத்தியை பன்மடங்கு பெருக்க நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது எப்படி? என்பது குறித்து குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையம் சார்பில் விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான் மலை உழவர் பயிற்சி நிலையத்தில் எண்ணெய்வித்துப் பயிர்கள் மற்றும் எண்ணெய்ப் பனை தேசிய இயக்கத்தின் சார்பாக எண்ணெய்வித்து விவசாயிகளுக்கு செயல் விளக்க பயிற்சி முகாம் நடைபெற்றது. பயிற்சி முகாமுக்குத் தலைமை வகித்து துவக்கிவைத்த வேளாண் துணை இயக்குநர் பாலன் பேசியதாவது: எண்ணெய்வித்துப் பயிர்களில் அதிக மகசூல் பெற வேளாண் துறை பரிந்துரைக்கும் நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகள் தவறாது கடைப்பிடிக்க வேண்டும். அத்துடன் அரசின் வேளாண் திட்டங்களை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், இதுபோன்ற முகாமில் அறிந்துகொள்ளும் நவீன தொழில்நுட்பங்களை பிற விவசாயிகளுக்கும் தெரிவித்து எண்ணெய் வித்துப் பயிர்கள் உற்பத்தியை பன்மடங்கு பெருக்க துணை நிற்க வேண்டும். முகாமுக்கு முன்னிலை வகித்த வேளாண் துணை இயக்குநர் சாந்தி பேசுகையில், மண் பரிசோதனை செய்வதன் மூலம் உரச் செலவைக் குறைப்பதுடன் மண் வளத்தையும் மேம்படுத்தலாம். மேலும் நிலக்கடலையில் ஜிப்சம் அவசியம் இட்டால் அதிக பயன்பெறலாம் என்றார். இதைத் தொடர்ந்து, நிலக்கடலையில் விதை நேர்த்தி, பயிர் எண்ணிக்கைப் பராமரிப்பு, உர நிர்வாகம், களை நிர்வாகம், பயிர்ப் பாதுகாப்பு ஆகியன குறித்து உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் ராஜசேகரன் பயிற்சி அளித்தார். குடுமியான்மலை மத்தியக் கட்டுப்பாட்டு ஆய்வக மூத்த வேளாண் அலுவலர் இப்ராம்ஷா பயிற்சியில் கலந்துகொண்டு பயிர்களில் நுண்ணூட்டங்களின் பங்கு

குறித்தும் உயிர் உரங்கள் இடுவதன் அவசியம் குறித்தும் விளக்கிக் கூறினார். குடுமியான்மலை வேளாண் கல்லூரி உழவியல் உதவிப் பேராசிரியர் சங்கீதா, நிலக்கடலை சாகுபடிக்கான நவீன தொழில்நுட்பங்களை விளக்கிக் கூறினார். மேலும், பயிற்சி முகாமில் திரளாகப் பங்கேற்ற விவசாயிகளுக்கு பயிர் எண்ணிக்கைப் பராமரிப்பு, விதைநேர்த்தி, ஊட்டச்சத்துக் கரைசல் தெளித்தல் மற்றும் நவீன தொழில்நுட்ப முறைகள் குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும், அவர்களுக்கு இதுதொடர்பான தொழில்நுட்பக் கையேடு மற்றும் பயிற்சி ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. முடிவில் வேளாண் அலுவலர் ராஜசேகரன் நன்றி கூறினார்.

## திருந்திய நெல் சாகுபடி முறை விவசாயிகளுக்கான பயிர் விளைச்சல் போட்டி

புதுக்கோட்டை, : திருந்திய நெல் சாகுபடி முறை விவசாயிகளுக்கான பயிர் விளைச்சல் போட்டி புதுக்கோட்டை அடுத்த வடவாளம் கிராமத்தில் திருந்திய நெல் சாகுபடியாளர் மெய்யர் வயலில் நடைபெற்றது. புதுக் கோட்டை அடுத்த வடவாளம் கிராமத்தை சேர்ந்த விவசாயி மெய்யர் என்பவர் திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்து மாநில அளவில் நடைபெற்ற பயிர் விளைச்சல் போட்டியில் பங்கேற்க விண்ணப்பித்திருந்தார். இதைத் தொடர்ந்து, அவரது வயலில் நடுவர்கள் குழு முன்னிலையில் அறுவடை நடைபெற்றது. இந்த பயிர் விளைச்சல் போட்டிக்கு வேளாண் இயக்குநரின் பிரதிநிதியாக கருர் வேளாண் இணை இயக்குநர் தெய்வேந்திரன், மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஷாஜஹான் ஆகியோரும், கலெக்டரின் பிரதிநிதியாக மணமேல்குடி வேளாண் உதவி இயக்குநர் பெரியசாமியும், அலுவலர் சாரா பிரதிநிதியாக முன்னோடி விவசாயி கணேசன் ஆகியோரும் கலந்துகொண்டனர். இதுகுறித்து மெய்யர் கூறியதாவது: திருந்திய நெல் சாகுபடிக்கான நவீன தொழில்நுட்பத்தை முறையாகக் கடைபிடித்தேன். அத்துடன் வேளாண் துறையினரின் ஆலோசனைப்படி நெல்

நுண்ணூட்டச் சத்து உயிர் உரங்கள், சிங்க் சல்பேட் மற்றும் கோனோவீடர் களைக்கருவி போன்ற இடுபொருட்களை பயன்படுத்தினேன். மேலும் பாசனத்துக்கு தண்ணீர் குறைவாக இருந்ததால் காய்ச்சலும் பாய்ச்சலுமாக தண்ணீர் பாய்ச்சியதின் மூலம் எனக்கு அதிக மகசூல் கிடைத்துள்ளது என்றார். இதற்கான களப் பணியை புதுக்கோட்டை வேளாண் உதவி இயக்குநர் ரவிச்சந்திரன், வேளாண் அலுவலர்கள் பூபதி கண்ணன், மதியழகன், உதவி வேளாண் அலுவலர் சக்திவேல், அட்மா தொழில்நுட்ப அலுவலர் அருளரசு ஆகியோர் செய்திருந்தனர்.

## கரும்பு பயிரில்இரும்பு மற்றும் போரான் சத்து பற்றாக்குறை போக்கும் வழிமுறை

சேதுபாவாசத்திரம், : கரும்பு பயிரில் காணப்படும் இரும்பு மற்றும் போரான் சத்துக்கள் பற்றாக்குறையை போக்கும் வழிமுறை குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரிய சாமி வெளியிட்டுள்ள அறிக்கை: கரும்பு பயிரில் இரும்பு சத்து பற்றாக்குறையால் இளம் இலைகள் வெளுத்து காணப்படும். பயிரின் குருத்து இலைகளும் காகி தம் போன்று வெளுத்தும் காணப்படும். இக்குறையை போக்க 5 கிராம் பெர்ரஸ் சல்பேட் (அன்னபேதி உப்பு) மற்றும் 10 கிராம் யூரியாவை ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து இலை வழியாக தெளிக்க வேண் டும். அல்லது ஏக்கருக்கு 10 கிலோ பெர்ரஸ் சல்பேட்டையும், 5 டன் தொழுஉரத்தையும் அடியுரமாக இட வேண்டும். துத்தநாக சத்து பற்றாக்குறை ஏற்பட்டால் இலைகளின் நடுவில் பெரிய காய்ந்த கோடுகளும் மற்றும் இலை நடுநரம்பில் காய்ந்த புள்ளிகளும் தோன்றும். இதை நிவர்த்தி செய்ய ஒரு ஏக்கருக்கு துத்தநாக சல்பேட் 10 கிலோ அடியுர மாக இட வேண்டும் அல் லது 5 கிராம் துத்தநாக சல் பேட்டை 1

லிட்டர் தண்ணீ ரில் கரைத்து 10 நாட்கள் இடைவெளியில் இலை வழியாக தெளிக்க வேண் டும். போரான்சத்து பற்றாக்குறையால் இலைகளின் நுனியிலிருந்து 2-3 செ.மீ அகலத்துக்கு அழுகிய பழுப்புநிற புள்ளிகள் காணப்படும். இலைகள் மிகவும் சிறுத்து, இளம் இலைகள் மஞ்சள் நிறமாக மாறிவிடும். வளரும் கரும் பின் நுனிப்பகுதி காய்ந்தும், அதன் பக்கவாட்டில் இலை குருத்துக்கள் அனைத்தும் ஒரே கொத்தாக காணப் படும். இக்குறையை போக்க ஒரு ஏக்கருக்கு போராக்ஸ் 400 கிராம் அடியுரமாக இடவேண்டும் அல்லது போராக்ஸ் 3 கிராமை ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து இலை வழியாக 10 நாட்களுக்கு ஒருமுறை தெளிக்க வேண்டும்.

## <u>விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>

திண்டுக்கல், : மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று கலெக்டர் அலுவலகத்தில் நடக்க உள்ளது. காலை 10 மணிக்கு துவங்கும் இக்கூட்டத்திற்கு கலெக்டர் ஹரிஹரன் தலைமை வகிக்கிறார். இதில் கடந்த கூட்டத்தில் விவசாயிகள் அளித்த மனுக்கள் மீது விவாதம் நடத்தப்படும். எனவே விவசாயிகள் திரளாக கலந்து கொள்ளும்படி மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

## <u>சொட்டுநீர் பாசன திட்டத்தை பயன்படுத்த விவசாயிகளுக்கு கலெக்டர் அழைப்பு மானியம் பெற விண்ணப்பிக்கலாம்</u>

தூத்துக்குடி, : தூத்துக்குடி மாவட்டத்தில் 100 சதவீத மானியத்தில் சொட்டு நீர் பாசன திட்டத்தை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ளலாம் என கலெக்டர் ரவிக்குமார் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தூத்துக்குடி மாவட்டத்தில் 100 மற்றும் 75 சதவீதம் மானியத்துடன் கூடிய நுண்ணீர் பாசனத்திட்டம் கடந்த மூன்று ஆண்டுகளாக தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தோட்டக்கலைப் பயிர்களான பழங்கள், காய்கறிகள், மலர்கள், வாசனைப் பயிர்களிலும், வேளாண்மை பயிர்களான தென்னை, கரும்பு,

பருத்தி, மக்காச்சோளம், துவரை போன்ற பயிர்களிலும், சொட்டுநீர் பாசன வசதியை அரசு மானிய உதவியுடன் மேற்கொள்ளலாம். சிறு விவசாயி எனில் 100 சதவீதம் அரசு மானியத்துடனும், இதர விவசாயிகள் எனில் 75 சதவீதம் மானியத்தில் சொட்டுநீர் பாசன வசதி செய்து கொடுக்கப்படுகிறது. சொட்டுநீர் பாசனத்தின் மூலம் நீரைப் பயிருக்கு அளிப்பதால் நீர் சிக்கனமாகிறது. பயிரின் தேவைக்கேற்ப நீர் வேருக்கு அருகில் பாய்வதால், பயிர் செழிப்பாக வளரும். களைகள் வளர வாய்ப்பு குறைவு. மகசூல் அதிகரிக்கிறது. இம்மாவட்டத்திற்கு நடப்பு ஆண்டில் 234 ஹெக்டர் பரப்பில் தோட்டக்கலைப் பயிர்களுக்கும், 8 ஹெக்டர் பரப்பளவு வேளாண்மை பயிர்களுக்கும் அரசு மானியத்துடன் சொட்டு நீர் பாசன வசதி மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நிதி இலக்காக இம்மாவட்டத்திற்கு ரூ.132.59 லட்சம் பெறப்பட்டுள்ளது. இறவை பயிராக கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணறு மூலம் மின்மோட்டார் இணைப்பு பெற்றவர்கள், ஆயில் இன்ஜின் மூலம் பயிருக்கு நீர் பாய்ச்சுபவர்கள் இந்த நல்ல வாய்ப்பை பயன்படுத்தி தங்கள் தோட்டத்தில் சொட்டுநீர் பாசனம் அமைத்து பயன்பெறலாம். இத் திட்டத்தில் பங்கு பெற விருப்பமுள்ள சிறு விவசாயிகள், சிறு விவசாயி என வேளாண்மை துறை சான்று அட்டை நகல் அல்லது தாசில்தார் சான்றுடன் தங்களது ரேஷன் கார்டு நகல் மற்றும் நில உரிமை கணினி பட்டாவுடன் இணைத்து கலெக்டர் அலுவலக நுழைவு வாயிலில் சொட்டுநீர் பாசன விண்ணப்பம் என்று முகவரியிட்ட பெட்டியில் சேர்க்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பெருந்துறை வாரச்சந்தையில் ரூ.29 லட்சத்துக்கு தேங்காய் விற்பனை**



பெருந்துறை வாரச்சந்தையில் ரூ.29 லட்சத்துக்கு தேங்காய் விற்பனை ஆனது.

தேங்காய்

பெருந்துறை வாரச்சந்தையில் நேற்று தேங்காய் விற்பனை நடை பெற்றது. இது விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் நடந்த நேரடி விற்பனை ஆகும். இதற்கு கர்நாடகா மாநிலம் மைசூரில் இருந்து 10 ஆயிரம் முதல் தர தேங்காய்களை விவசாயிகள் கொண்டு வந்திருந்தனர். இது ரூ.23–க்கு விற்பனை ஆனது. மொத்தம் 2 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய்க்கு முதல் தர தேங்காய் விற்பனை ஆனது. இதேபோல் பொள்ளாச்சி பகுதியில் இருந்து 10 ஆயிரம் 2–ம் தர தேங்காய் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது சராசரியாக 18 ரூபாய்க்கு விற்பனை ஆனது. மொத்தம் ரூ.1 லட்சத்து 80 ஆயிரத்துக்கு 2–ம் தர தேங்காய் விற்பனை ஆனது.

ரூ.29 லட்சத்துக்கு விற்பனை

பெருந்துறை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து 1 லட்சத்து 80 ஆயிரம் 3–ம் தர தேங்காய் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது சராசரியாக தேங்காய் ஒன்று 15 ரூபாய்க்கு விற்பனை ஆனது. மொத்தம் ரூ.25 லட்சத்துக்கு தேங்காய் விற்பனை ஆனது. மொத்தம் 29 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய்க்கு தேங்காய் விற்பனை ஆனது.

# <u>விவசாயிகளுக்கு தேவையான இயற்கை உரம் வழங்கிட பேரூராட்சித்துறை சிறப்புடன் செயல்பட வேண்டும் கலெக்டர் ஜெயந்தி பேச்சு</u>



விவசாயிகளுக்கு தேவை யான இயற்கை உரம் வழங்கிட பேரூராட்சித் துறை சிறப்புடன் செயல் பட வேண்டும் என்று கலெக்டர் ஜெயந்திபேசினார்.

மண்புழுஉரம்

கரூர் மாவட்டம், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி, தளவா பாளையத்தில் பேரூராட்சித்துறையின் மூலம் வளம்மீட்பு பூங்கா அமைக் கப்பட்டு அதன் மூலம் பயன் பாடற்ற பொருட்களை சேக ரித்து அதில் மக்காத பொருட் களை தார்சாலை அமைப் பதற்கான இடுபொருட்களாக மாற்றப்பட்டு வரும் பணியினை மாவட்ட கலெக்டர் ஜெயந்தி பார்வை யிட்டு ஆய்வு செய்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:- பேரூராட்சித்துறையின் மூலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பேரூராட்சி பகுதிகளிலும் இத்திட் டத்தில் பொதுமக்களால் பயன்படுத் தப்பட்ட குப்பைகள் சேகரிக் கப்பட்டு அதில் மக்கும் குப்பை, மக்காத குப்பை என இரு வகையாகப் பிரிக்கப்பட்டு மக்கும் குப்பையின் மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் மண்புழு உரம், இயற்கை உரம், இயற்கை எரிவாயு போன்றவை தயாரிக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமின்றி இயற்கை உரங்களை பேரூராட்சி பகுதியில் வளர் க்கப்படும் மரங்களுக்கு பயன் படுத்துவதால் மரங்களின் வளர்ச்சி அதிகரித்து வருகின் றன. மேலும் பூங்காக்கள் அமைத்திட இயற்கை உரம், மண் புழு உரம் மிகவும் பயனுள்ளதாக இருந்து வருகின்றன.

தார்சாலை

மேலும் அதனை தொடர்ந்து தற்போது மக்காத குப்பை களை சேமித்து தார்சாலை அமைப்பதற்கு தேவையான இடுபொருட்கள் தயாரிக்க திட்டமிட்டு தற்போது அனைத்து பேரூராட்சிகளி லும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு தயாரிக்கப் படும் இடுபொருட் களை பேரூராட்சி

பகுதிகள் மற்றும் ஊராட்சி பகுதிகளில் தார் சாலை பணிகளுக்கு தேவை யான இடுபொருளாக விற்பனை செய்யும் பொழுது பேரூராட்சிக்கு வருமானம் பெறுவதுடன் பேரூராட்சி பகுதிகள் முழுவதும் தூய்மை பகுதிகளாகின்றது. அதனால் முழு சுகாதாரம் முழு அளவில் பெற முடிவதுடன் ஆரோக்கியமாக அனைவரும் வாழலாம். எனவே பொது மக்கள் பயன்பெறும் விதத் திலும் விவசாயிகளுக்கு தேவை யான இயற்கை உரங்கள் வழங்கிடும் வகையிலும் பேரூராட்சித்துறை சிறப் புடன் செயல்பட்டு பேரூராட் சித்துறைக்கு இதன் மூலம் நிரந்தர வருமானம் கிடைக் கின்ற வகையில் செயலாற் றிட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். இந்த ஆய் வின் போது புஞ்சை தோட்டக் குறிச்சி பேரூராட்சி தலைவர் பெரியண்ணன், செயல் அலு வலர் ரவிக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**<u>அரசு நிர்ணயித்த குறைந்த பட்ச ஆதார விலைக்கு பருத்தி கொள்முதல் செய்வது குறித்து கலெக்டர் தலைமையில் ஆலோசனை</u>**



பெரம்பலூர்

அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச ஆதார விலைக்கு பருத்தி கொள்முதல் செய்வது குறித்து பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் தரேஸ்அஹமது தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

<u>ஆலோசனைகூட்டம்</u>

தமிழக அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச ஆதார விலைக்கு பருத்தி கொள்முதல் செய்வது குறித்து பெரம்பலூர் மாவட்ட பருத்தி விவசாயிகளுக்கும், இந்திய பருத்திக் கழக அலுவலர்களுக்கும் இடையேயான ஆலோசனைக் கூட்டம் பெரம்பலூர் கலெக்டர் தரேஸ்அஹமது தலைமையில் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது.கூட்டத்தில் விவசாயிகள் பருத்தியை நேரடி கொள்முதல் செய்வது குறித்தும், பருத்திக்கு விலை நிர்ணயம் செய்வது குறித்தும்

தங்களது கருத்துக்களை இந்திய பருத்திக் கழக அலுவலர்களிடம் தெரிவித்தனர். விவசாயிகளின் கருத்துகளை முழுமையாக கேட்ட பிறகு இந்தியப ருத்திக் கழக அலுவலர்கள் பதில் அளித்தனர். 23-ந்தேதி முதல்கொள்முதல்

<u>கூட்டத்தில்கலெக்டர்தரேஸ்அஹமதுபேசியதாவது:-</u>

பெரம்பலூர் மாவட்டம் பருத்தி சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியில் தமிழ்நாட்டில் முதலிடம் வகிக்கிறது. நமது மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக சராசரியாக 27,230 ஹெக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு 28,918 மெட்ரிக் டன் பருத்தி உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. பருத்திக்கு சராசரியாக ஒரு குவிண்டாலுக்கு ரூ.3,800 முதல் ரூ.4 ஆயிரம் வரை கிடைக்கப்பெற்றது. இதுவரைக்கும் குறைந்தபட்ச ஆதார விலைக்கு குறையாமல் கிடைக்கப்பெற்றது. கடந்த 25 ஆண்டுகளாக இந்தியப்பருத்தி கழகம் தமிழ்நாட்டில் பருத்தி கொள்முதல் செய்யவில்லை. தற்போது பருத்தியின்விலை குறைந்தபட்ச ஆதார விலைக்கு கீழ் விற்பனை நடைபெறுவதால் மாவட்ட நிர்வாகத்தின் பெரும் முயற்சியின் அடிப்படையில் வருகிற 23-ந் தேதி எளம்பலூர் வடக்குமாதவி சாலையில் அமைந்துள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் இந்திய பருத்திக் கழகம் மூலம் பருத்தியினை கொள்முதல் செய்யஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

<u>பணபட்டுவாடா</u>

விற்பனைக்கு கொண்டு வரும் பருத்தியின் ஈரப்பதம், இழையின் நீளம், இழையின் வலிமைத்தன்மை போன்ற தரத்தினை ஆய்வு செய்து அதனடிப்படையில் இந்திய பருத்திக் கழகம் விலை நிர்ணயம் செய்வார்கள். இந்திய பருத்தி கழகம் கொள்முதல் செய்யப்பட்ட தினத்திலிருந்து 8 நாட்களுக்குள் பணம் கிடைக்குமாறு பருத்தி விவசாயிகளுக்கு காசோலையாக பணம்பட்டுவாடா செய்யப்படும்.

<u>சின்னவெங்காயம்விற்பனை</u>

மாவட்ட நிர்வாகத்தின் பெரும் முயற்சியில் செட்டிகுளம் சின்ன வெங்காய வணிக வளாகத்தில் சராசரியாக ஒரு நாளைக்கு 20-25

மெட்ரிக் டன் சின்ன வெங்காயம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதுவரை செட்டிகுளம் சின்ன வெங்காய வணிக வளாகத்தில் ரூ. 2.03 கோடி மதிப்பிலான 1455 மெட்ரிக் டன் சின்னவெங்காயம் வெற்றிகரமாக விற்பனை செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அடுத்த முயற்சியாக பருத்தி விவசாயிகளும் பயனடைய வேண்டுமென்ற வகையில் மாவட்ட நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த அரியவாய்ப்பினை பயன்படுத்திக்கொண்டு பருத்தி விவசாயிகளும் தாங்கள் சாகுபடி செய்யும் பருத்தியை பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு கொண்டுவந்து விற்பனை செய்வதன் மூலம் சரியான எடையில் சரியான விலை பெற முடியும். இந்த தகவலை உங்கள் பகுதியிலுள்ள மற்ற பருத்தி விவசாயிகளுக்கும் தெரிவித்து பருத்தியை நேரடி கொள்முதல் நிலையத்திற்கு கொண்டு வர வழி வகை செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். கூட்டத்தில் வேளாண்மை இணைஇயக்குனர் அழகிரிசாமி, கோயம்புத்தூர் இந்திய பருத்திக்கழக அலுவலர்கள் வெங்கடாசலம், விவேகானந்த், வேளாண் வணிக துணை இயக்குனர் சுப்பிரமணியன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கனகசபை உள்ளிட்ட அலுவலர்கள் மற்றும் பருத்தி விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு தொகை



கோவில்பட்டி அருகே உள்ள வெங்கடேசுவரபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் கடந்த 2012– 2013–ம் ஆண்டு பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு காப்பீட்டு தொகை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. கூட்டுறவு சங்க தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கி, 450 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.1 கோடியே 27 லட்சம் காப்பீட்டு தொகையை வழங்கினார். கூட்டுறவு சங்க செயலாளர்

சுப்புராஜ், துணை தலைவர் அய்யாசாமி, நிர்வாகக்குழு உறுப்பினர்கள் வேலம்மாள், பால்ராஜ், பசுபதி, தங்க துரைச்சி, ராமலட்சுமி, சுப்புலட்சுமி, பஞ்சாயத்து செயலாளர் சின்னச்சாமி, அல்லித்துரை உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## <u>28 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும்</u>



விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட கலெக்டர் மு.கருணாகரன் வழங்கியபோது எடுத்த படம்.

நெல்லை மாவட்டத்தில், 28 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும், என்று கலெக்டர் மு.கருணாகரன் கூறினார்.

குறைதீர்க்கும்நாள்

நெல்லை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று கலெக்டர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் நடந்தது. கலெக்டர் மு.கருணாகரன் தலைமை தாங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் குழந்தைவேலு, வேளாண்மை துணை இயக்குனர் பெருமாள், கலெக்டரின் நேர்முக உதவியாளர் ராஜன் ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலைவகித்தனர்.

கூட்டத்தில்நடந்தவிவாதம்வருமாறு:-

கசமுத்து:- நெல்லை மாவட்டத்தில் தற்போது அதிக அளவில் நெல் பயிரிடப்பட்டு அறுவடை நடந்து உள்ளது. ஆனால் நெல்லுக்கு உரிய விலை கிடைப்பது இல்லை. எனவே அரசு அதிக அளவில் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க வேண்டும். அரசு 150 கிலோ நெல்லுக்கு ரூ.1700 வழங்குகிறது. ஆனால் வியாபாரிகள் 100 கிலோவுக்கு ரூ.1400 வழங்குகிறார்கள். எனவே நெல்லுக்கு உரிய விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கடனாநதி அணையில் கசிவு ஏற்பட்டு தண்ணீர் தேவையில்லாத நேரங்களில் வெறியேறுகிறது. இந்த

கசிவை அடைக்க அரசு ரூ.3¾ கோடி நிதி ஒதுக்கி உள்ளது. எனவே உடனே பணியை தொடங்க வேண்டும். இல்லை எனில் விவசாயிகளை திரட்டி சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபடுவோம். கொள்முதல்நிலையம்

பெரும்படையார்:- திருக்குறுங்குடியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும். அரசு நெல் கொள்முதல் நிலையம் அமைக்காததால் விவசாயிகளிடம், வியாபாரிகள் நெல்லை அடிமாட்டு விலைக்கு வாங்கி செல்கிறார்கள். இதனால் விவசாயிகள் அதிக அளவில் பாதிக்கப் படுகிறார்கள். கலெக்டர் கருணாகரன்:- நெல்லை மாவட்டத்தில் 28 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க உத்தரவிடப்பட்டு உள்ளது. சேரன்மாதேவி, கல்லிடைக்குறிச்சி, சிவசைலம், கீழப்பாவூர், புளியரை, கடையநல்லூர், காருக்குறிச்சி, திருக்குறுங்குடி, குப்பக்குறிச்சி, முன்னீர்பள்ளம், சிவகிரி, வடகரை, ஊத்துமலை, சீதபற்பநல்லூர், திடியூர், கடையம், பாப்பாக்குடி, புளியங்குடி, அம்பை கோட்டாரங்குளம், சுந்தரபாண்டியபுரம், பாலாமடை, மானூர், கீழப்பாவூர் ஆகிய 23 இடங்களில் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு வருகிறது. தென்கலம், கீழப்பாட்டம், அரியகுளம், ஆழ்வார்குறிச்சி, நடுவக்குறிச்சி ஆகிய 5 இடங்களில் விரைவில் திறக்கப்படும். விவசாயிகளுக்கு நெல்லுக்கு உரிய விலை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஒரு மையத்தில் தற்போது 5 டன், 10 டன் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. இது 100 டன் அளவுக்கு கொள்முதல் செய்யப்படும். இயந்திரம் ல்லை செல்லத்துரை:- நெல்லை மாவட்டத்தில் இந்த ஆண்டு நெல் அதிக அளவில் விளைந்து உள்ளது. ஆனால் அதை அறுவடை செய்ய தேவையான நெல் அறுவடை இயந்திரம் இல்லை. இதனால் விவசாயிகள் அவதிப்படுகிறார்கள். ஒரு மணி நேரத்திற்கு ரூ.2 ஆயிரத்து 500 வசூல் செய்கிறார்கள். கடந்த அக்டோபர் மாதம் அறுவடைக்கு சங்கிலி வண்டிக்கு மணிக்கு ரூ.1900-ம் வாங்கினார்கள். தற்போது ரூ.2 ஆயிரத்து

500 வாங்குகிறார்கள். டயர் வண்டிக்கு ரூ.1100 வாங்கினார்கள். தற்போது ரூ.1500 வசூல் செய்கிறார்கள். இதனால் அதிக செலவாகிறது. எனவே வாடகையை அரசே நிர்ணயம் செய்ய வேண்டும்.

கலெக்டர்:- இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாட்டுசந்தை

முன்னீர்பள்ளம் பாலையா:- மேலப்பாளையம் சந்தை வாரம்தோறும் செவ்வாய்கிழமை நடந்து வருகிறது. ஆனால் திங்கட்கிழமை மாலையிலேயே சந்தை கூடி வியாபாரம் நடக்கிறது. திங்கட்கிழமை திருட்டு மாடுகள் விற்பனை செய்வதற்கு வசதியாக உள்ளது. ஏற்கனவே பல திருட்டு மாடுகளை அங்கு விற்பனை செய்கிறார்கள். எனவே செவ்வாய்க்கிழமை மட்டும் தான் மாட்டு சந்தை நடைபெற வேண்டும்.

குலய அண்ணாமலை:- கடையம் ராமநதி அணையின் பாசன பகுதியில் அதிக அளவில் நெல் விளைந்து உள்ளது. இதனால் அந்த பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும். ராமநதி அணையில் இருந்து தேவையில்லாமல் தண்ணீரை திறந்து விட்டு விட்டார்கள். இதனால் அணை வறண்டு வருகிறது. இதனால் அடுத்த பருவத்திற்கு நெல் நடும்போது விவசாயிகள் அதிக அளவில் பாதிக்கப்படுவார்கள். ராமநதி மேல்மட்ட கால்வாய் திட்டத்தை உடனே நிறைவேற்ற வேண்டும்.

வனவிலங்குகள்

வடகரை சேக்மைதீன்:- கடையநல்லூர் வனப்பகுதியில் உள்ள வனவிலங்குகள் அங்கிருந்து கீழே இறங்கி வந்து விவசாய நிலங்களை சேதப்படுத்துகிறது. விவசாயிகளை தாக்குகிறது. இது குறித்து அதிகாரிகளுக்கு பல முறை மனு கொடுத்தும் எந்த நடவடிக்கையும் இல்லை.

கலெக்டர்:- வனத்துறையினர், காட்டு விலங்குகள் விளைநிலத்தில் புகுந்து பயிர்களை அழிப்பதற்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும். வனப்பகுதியில் விலங்குகள் தண்ணீர் குடிக்க தண்ணீர் தொட்டி அமைக்க

நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு விவாதம் நடந்தது.

நலத்திட்டஉதவிகள்

இதைத்தொடர்ந்து விவசாயிகள் பாசன குளங்கள், கால்வாய்களில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றவேண்டும். விவசாயிகளுக்கு விரைவாக பயிர்கடன் வழங்கவேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வற்புறுத்தி மனுக்கள் கொடுத்தனர். பின்னர் 20 விவசாயிகளுக்கு ரூ.13 லட்சம் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை கலெக்டர் கருணாகரன் வழங்கினார்.